அ.இ.அ.தி.மு.க., காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சித் தலைவர்கள் காலையிலே பேசலாம். அதன்பின்பு அமைச்சர் அவர்கள் பதிலுரை வழங்குவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

6. அரசினர் தீர்மானம்

விதி 32—ஐத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நாளை 10—2—2011 அன்று வினாக்கள்—விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"சட்டப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்—விடைகள் என்று உள்ள சட்டப் பேரவை விதி 32—ஐ 10—2—2011 (வியாழக்கிழமை) அன்று தளர்த்தி அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை (10—02—2011) வினாக்கள்—விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (10—2—2011) வியாழக்கிழமை காலை 9—30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1—46 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.